## அனுராதபுர பல்கலைக்கழக கல்லூரி - 2018

---

### 1.1 அபிப்பிராயம்

அனுராதபுர பல்கலைக்கழக கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்தோபர் 03 ஆம் திகதிய 1882/51 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக கட்டளைச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழக கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கல்லூரி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கல்லூரியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில்

ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' கல்லூரிக்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர்களிடமிருந்து பெறப்பட்ட சேவைகளிற்காக எவ்வாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்படுகின்றன என்பதை 04 வகைப்படுத்தல்களின் கீழ் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 19 குறிப்பிடுகின்றது. தற்போது வழங்கப்படுகின்ற சேவைகளிற்காக சேவை முடிவுறுத்தப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகளை 02 ஆம் வகை குறிப்பிடுகின்றதுடன் பணிக்கொடை கொடுப்பனவு அதன் கீழ் வருகின்றது. நியமத்தில் வெளிப்படுத்தப்பட்டவாறு எதிர்காலத்தில் ஊழியர்களிற்கு பணிக்கொடையாக மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் உண்மையான மதிப்பீட்டை (actuarial valuation) மேற்கொண்ட பின்னர் உண்மையானதொன்றாக Actuarier ஒருவரால் கணிப்பிடப்பட வேண்டும். எனினும் பல்கலைக்கழக கல்லூரி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஊழியர் பணிக்கொடை தொடர்பாக அத்தகைய கணிப்பீட்டை மேற்கொண்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்ட போது முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தவாறு ஒவ்வொரு ஊழியராலும் பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தற்போது அனுராதபுர பல்கலைக்கழக கல்லூரியில் 34 நிரந்தர ஊழியர்கள் காணப்படுகின்றனர். 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் பணிக்கொடைக்கு உரித்துடைய 5 ஆண்டு சேவைக் காலப்பகுதியை பூர்த்தி செய்த ஊழியர்கள் காணப்படவில்லை. பல்கலைக்கழக கல்லூரி 2014 நவம்பரில் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததால் கல்லூரி ஆரம்பித்ததிலிருந்து சேவையிலுள்ள 07 ஊழியர்கள் 2019 நவம்பர் 20 இன் பின்னர் பணிக்கொடையை பெறுவதற்கு உரித்துடையவராவர். இதனால் 2019 ஆம் ஆண்டின் பின்னர் கணக்குகளை தயாரிக்கும் போது Actuarier ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளுடன் பணிக்கொடைக்காக ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாணவர் ஒருவரிற்கு ரூபா 5,000 தொகையான நூலக வைப்புக்கள் மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்தது. அவ்வாறு வைப்புக்களை சேகரிப்பதற்கு முறையான அங்கீகாரம் பல்கலைக்கழக கல்லூரியால் பெறப்பட்டிருக்கவில்லை. நூலக வைப்புக்களாக 304 மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 1,520,000 கூட்டுமொத்தமான தொகை 2018 திசெம்பர் மாதத்தில் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பணிப்பாளர் கூட்டத்தொடரொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க நூலக வைப்பாக மாணவரொருவரிற்கு ரூபா 5,000 தொகை அறவிடப்பட்டிருந்தது. இத் தொகை கற்கைநெறிக் கால முடிவில் மீளளிக்கப்படக் கூடியதாக உள்ளது. மாணவர்களால் விலையுயர்ந்த புத்தகங்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது. அப்புத்தகங்களிற்கு ஏற்படுகின்ற அவ்வாறான சேதங்களை மேவுகை செய்வதற்கு வைப்பு பெறப்படுகின்றது. நிலையான வைப்பொன்றில் வைப்புக்களை முதலீடு செய்வதற்கு முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. பின்னர் 2018.05.08 இல் நூலக வைப்புக்களை அறவீடு செய்வதற்கு மீண்டும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் வைப்புக்கள் அறவிடப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

| விடயம் | தொகை | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| பல்கலைக்கழகக் கல்லூரிக்கு சொந்தமான ஆய்வுகூடங்களிற்காக மீளாய்வாண்டின் போது இரசாயனங்களை கொள்வனவு செய்தமை | 2,244,838 | பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆய்வுகூடங்களிற்கு கொள்வனவு செய்யப்பட்ட இரசாயனங்கள் வழங்கப்படுகின்ற போதிலும் ஆய்வுகூடங்கள் இரசாயனங்களின் பெறுகை மற்றும் வழங்கலை பதிவுசெய்வதற்கு முறையான நடைமுறையொன்றை கொண்டிருக்கவில்லை. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 942,649 தொகையான ஆய்வுகூட இருப்பு மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவது சாத்தியமற்றிருந்தது. | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,244,838 தொகை கற்றல் உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது, அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவத்திற்காக இரசாயனங்களின் கொள்வனவிற்காக ரூபா 712,814 தொகை செலவிடப்பட்டிருந்தது. தற்போது இரசாயனங்களின் பெறுகை மற்றும் வழங்கலை பதிவு செய்வதற்காக அவ் ஆய்வுகூடங்களில் தற்போது பதிவேடொன்று பேணப்பட்டிருந்தது. | களஞ்சியங்களின் பெறுகை மற்றும் வழங்கல் தொடர்பாக பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 754 | பொருளிருப்புக்கள் நிதியாண்டின் இறுதியில் சமப்படுத்தப்பட வேண்டியதுடன் எதிர்வரும் நிதியாண்டில் மீதி முன்கொண்டுவரப்பட வேண்டும். எனினும் பல்கலைக்கழகக் கல்லூரியின் பொருளிருப்புக்கள் 2015–2018 காலப்பகுதியின் போது வருடாந்தம் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக் கல்லூரியின் பொருளிருப்புக்கள் தற்போது சமப்படுத்தப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை 3.1.6 மற்றும் 3.2.7 ஆம் பிரிவுகள் | முன்னைய ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை ஒவ்வொரு நிதியாண்டின் மார்ச் 17 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக கல்லூரி 2017 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டிருந்ததுடன் அறிக்கைகள் கணக்காய்வுப் பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கைகள் கணக்காய்வுப் பிரிவிற்கு விரைவில் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) 1988 இன் 74 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் அதிகாரச்சட்டம் | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதலை சமர்ப்பிப்பதற்கு தகுதியான உத்தியோகத்தர்கள் மார்ச் 31 இல் உள்ளவாறான நிலைமையை சுட்டிக்காட்டி அதே ஆண்டின் யூன் 30 இற்கு முன்னர் அவர்களது வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதலை சமர்ப்பிப்பதற்கு தகுதியான பல்கலைக்கழக் கல்லூரியின் உத்தியோகத்தர்கள் அவ் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அவர்களது | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் அதிகாரச்சட்டத்தின் (1988 இன் 74 ஆம் இலக்க) |

| | | |
|---|---|---|
| அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | வெளிப்படுத்தல்களை சமாப்பித்திருந்தனர். | பிரகாரம் குறித்துரைக் கப்பட்ட திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத் துதல் பெறப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,705,727 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 7,936,933 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,231,206 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு எதிராக செலவினம் ரூபா 12,614,959 ஆல் அதிகரித்திருந்த போதிலும் வருமானம் ரூபா 16,846,166 ஆல் அதிகரித்திருந்தமை மேற்படி பற்றாக்குறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

ஊழியர் தொடர்பான கிரயம், பிரயாண செலவினங்கள் மற்றும் வழங்கல்கள் மற்றும் தேவைப்பாடுகள் போன்ற பல்கலைக்கழகத்தின் செலவின வகைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 13 சதவீதம், 50 சதவீதம் மற்றும் 49 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் நடைமுறை விகிதம் 1:0.16 ஆக காணப்பட்டதுடன் அப் பெறுமதி மீளாய்வாண்டின் போது 1:0.39 இற்கு குறைவடைந்திருந்தது. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விரைவு விகிதம் 1:0.0310 இலிருந்து 1:0.234 வரை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களிற்காக 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இரண்டு பரீட்சைகள் மற்றும் 2018 ஏப்ரலில் நடாத்தப்பட்ட பரீட்சை என்பவற்றின் சித்தியெய்தல் வீதம் குறைவாக | இந்த தகவல் சரியானதல்ல. சரியான தகவலுடன் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | மாணவர்களின் அறிவுத்திறன் மட்டத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. பரீட்சைகளில் சித்தியெய்தாமைக்கான காரணங்களை கண்டறிந்து அதன்மூலம் மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | பல்கலைக்கழக கல்லூரியில் கற்கைநெறிகளை நடாத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பாடத்திட்ட தொகுதிகள் (curriculam modules) இன் பிரகாரம் என்விகியூ 5 மற்றும் என்விகியூ 6 இன் முதலாவது மற்றும் இரண்டாவது மட்டங்கள் தொடர்பாக ஆறு மாத காலப்பகுதியையுடைய 08 கற்கைநெறிகளிற்குரிய 236 தொகுதிகள் (modules) தொடர்பாக மேவுகை செய்யப்பட வேண்டிய மணித்தியாலங்களில் 11 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சிலான மணித்தியாலங்கள் 131 தொகுதிகள் (modules) தொடர்பாக மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் கற்கைநெறிகளின் தரத்துடன் திருப்தியடையும் சாத்தியத்தன்மை காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. | இந்த தகவல் சரியானதல்ல. சரியான தகவலுடன் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | கற்கைநெறிகளின் தரத்தை உறுதிப்படுத்தி தேவையான விரிவுரை மணித்தியாலங்கள் மேவுகை செய்யப்பட வேண்டும். கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் சரியாகவும் உரிய நேரத்திலும் காணப்பட வேண்டும். |

## 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருட்கள் சேவை ஒப்பந்தங்களிற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,348,970 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகள் அவ்வாறு செய்யப்படாமல் 03 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | அவற்றில் சிலவற்றிற்காக உடன்படிக்கைகள் பெறப்பட்டிருந்தன. அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | பொறியியலாளரின் பூர்த்தியாக்கல் அறிக்கை இல்லாமலும் உரித்துக் கோரிக்கை காணப்படவில்லை என்பதற்கான சான்றிதழ் இல்லாமலும் நிர்மாணங்கள் தொடர்பான இறுதி விலைப்பட்டியல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக பூர்த்தியாக்கல் அறிக்கையையும் உரித்துக் கோரிக்கை காணப்படவில்லை என்பதற்கான சான்றிதழையும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உரிய சான்றிதழ்கள் முறையாக பெற்றுக்கொள்ளப் பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 07 தகுதிகாண் விரிவுரையாளர் பதவிகள், 02 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், 04 நூலக உதவியாளர் மற்றும் பராமரிப்பு தொழில்நுட்பவியலாளர் பதவிகள் மற்றும் 04 நிரந்தரப் பதவியணியினர் மற்றும் செய்னமுறையாளர் (Demonstrator) பதவிகள் உள்ளடங்கிய 18 வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பல்கலைக்கழக கல்லூரியில் காணப்பட்டன. | பதில் வழங்கப்படவில்லை. | வெற்றிடங்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிரப்பப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2009 யூன் 09 ஆம் திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் 2009(1) ஆம் வழிகாட்டலின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் பல்கலைக்கழக கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 04 ஆண்டுகள் காலப்பகுதியின் பின்னரும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகக் கல்லூரிகள் அனைத்தும் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் நிர்வாகம் செய்யப்படுகின்றன. அதன் உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் பல்கலைக்கழக கல்லூரிக்கு நியமனம் செய்யப்பட்ட கணக்காய்வு மதியுரையாளர் ஆகியோரால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உரிய அறிக்கைகள் இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்கலைக்கழகக் கல்லூரி 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய பிஈடி/55 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை ஸ்தாபித்திருக்கவில்லை. | 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய பிஈடி/55 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரிக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திடம் வேண்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் செயற்பட வேண்டியதுடன் பல்கலைக்கழக கலலூரியினால் மீளாய்வாண்டின் போது அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் அது தொடர்பான செயற்பாடுகள் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு போதியளவு நிதியேற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதை இனங்காண முடியாதிருந்தது. | பல்கலைக்கழக கல்லூரியின் நோக்கத்தை கணக்கிற்கு எடுத்தல் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நேரடியாக பங்களிப்பதில்லை. எனினும் 2017.08.14 ஆம் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரின் என்.பி/எஸ்.சீ.பி.17 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் செயற்படுவதற்காக குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் செயற்பட வேண்டும். |